# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| 04 மார்ச் 2018 | **தவக்காலம் மூன்றாம் ஞாயிறு** | இரண்டாம் ஆண்டு |



அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்பார்ந்த இறைமக்களே!
சென்ற வாரம் இயேசுவை நாம் மலை மீது சந்தித்தோம். உருமாறி, ஒளிவெள்ளத்தில் தோன்றிய இயேசு அவர். தவக்காலத்தின் மூன்றாவது ஞாயிறான இன்று இயேசுவைக் கோவிலில் சந்திக்கிறோம். கோபக்கனல் தெறிக்கத் தோன்றும் இந்த இயேசு நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்துகிறார்.

'யூதர்களுடைய பாஸ்கா விழா விரைவில் வரவிருந்ததால் இயேசு எருசலேமுக்குச் சென்றார்' (யோவான் 2:13) என்று இன்றைய நற்செய்தி துவங்குகிறது. இஸ்ரயேல் மக்கள் அனைவரும் பாஸ்கா விழாவையொட்டி எருசலேமுக்குச் செல்ல வேண்டும், அந்த ஆண்டுக்கான காணிக்கையைக் கோவிலில் செலுத்த வேண்டும். இயேசுவும் யூதருக்குரிய தன் கடமைகளை நிறைவேற்றக் கோவிலுக்குச் சென்றார். அங்குச் சென்றவர் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்தார். ஒவ்வோர் ஆண்டும் அவர் அங்குச் சென்று திரும்பியபோதெல்லாம் அவர் உள்ளத்தை வேதனைகளும், கேள்விகளும் நிறைத்திருக்க வேண்டும். இத்தனை ஆண்டுகள் அந்த வேதனைகளுக்கும், கேள்விகளுக்கும் விடை தேடி வந்த இயேசு, இன்று தானே விடையாக மாறத் துணிந்தார்.

இறைமக்களாகிய நாம் அனைவரும் இறைவனின் ஆலயங்களே! கடவுளின் ஆலயம் தூயது. நீங்களே அந்த ஆலயம். நீங்கள் கடவுளின் கோயிலென்று உங்களுக்குத் தெரியாதா? என்கிறார் தூய பவுல். நம் உடலாகிய கோயில் பாவ நாட்டங்களால் தீட்டுப்படும்போது கடவுள் வெளியேறி விடுகிறார். நாம் மற்றவருக்குத் தீங்கிழைக்கும் போது கடவுளுக்கே தீங்கிழைக்கிறோம் என்பதை உணர்ந்து தூய வாழ்வு நடத்தி நமது உடலாகிய ஆலயத்தைப் பேணுவோம், வாழ்வையே வழிபாடாக மாற்றுவோம். வாழ்த்துக்கள்.

# புனித வார நிகழ்வுகள்

### குருத்து ஞாயிறு: (25-03-2018)

ஆங்கிலத் திருப்பலி:
சனி மாலை 6:00 & 7:30 மணி
ஞாயிறு காலை 7:30, 11:30 & மதியம் 1:00 மணி
தமிழ் திருப்பலி:
காலை 9 மணிக்கு குருத்தோலை ஆசீரும், பவனியும், தொடர்ந்து தமிழில் திருப்பலியும் நடைபெறும்.
மாலை 6 மணிக்கு குருத்தோலை ஆசீரும், பவனியும், தொடர்ந்து தமிழில் திருப்பலியும் நடைபெறும்.

### பெரிய வியாழன்: (29-03-2018)

இரவு 8 மணிக்கு இருமொழித் திருப்பலி (ஆங்கிலமும் தமிழும்) நடைபெறும்.
மதியம் 12:30 மற்றும் மாலை 6:30 மணி திருப்பலிகள் நடைபெறாது.

### பெரிய வெள்ளி: (30-03-2018)

மதியம் 2:30 மணிக்கு ஆங்கிலத்தில் சிலுவைப்பாதையும், தொடர்ந்து திருவழிபாடும் நடைபெறும்.
மாலை 6:00 மணிக்குத் தமிழில் திருவழிபாடும், தொடர்ந்து சிலுவைப்பாதையும் நடைபெறும்.

### பாஸ்கா திருவிழிப்பு: (31-03-2018)

இரவு 8:00 மணிக்கு ஆங்கிலத்தில் சடங்குகளும், தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.
இரவு 11:30 மணிக்குத் தமிழில் திருப்பலி நடைபெறும்.

### உயிர்ப்பு ஞாயிறு: (01-04-2018)

ஆங்கிலத் திருப்பலிகள்: காலை 7:30, 11:30 & மதியம் 1:00 மணி
தமிழ்த் திருப்பலிகள்: காலை 9:30 & மாலை 6:30 மணி

# நற்கருணை ஆராதனை & ஒப்புரவு வழிபாடு

04-03-2018, ஞாயிறு, மாலை 5:00 மணி
தவக்காலச் சிறப்பு ஒப்புரவு வழிபாடு (பாவசங்கீர்த்தனம்) நடைபெறும்.

## இரண்டாம் காணிக்கை

இன்றைய இரண்டாவது காணிக்கை தூய வின்சென்ட் தெ பவுல் சபையினர் ஏழை எளியோருக்குச் செய்யும் நற்செயல்களுக்காகப் பயன்படுத்தப்படும். உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.

## தமிழில் சிலுவைப்பாதை

இத்தவக்கால வெள்ளிக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு தமிழில் சிலுவைப்பாதையும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். உங்கள் தவக்கால அனுபவம் சிறப்படைய அன்புடன் அழைக்கிறோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்

சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

## முழு இரவுத் திருவிழிப்புச் செப வழிபாடு

10-03-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு

18-03-2018, ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை (பல்நோக்குச் சமூகக் கூடம்)

முன்பதிவுக் கட்டணம்; $30 செலுத்தி, முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு,

கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க: திரு. ரெக்ஸ் (9822-6171)

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ர | ல | உ | ள் | ள | த் | தி | ல் | ச |
| கு | பொ | ரு | த் | வு | னை | க | ளை | தீ | தை |
| ற் | து | ன் | தி | ட | வா | தா | தா | கா | உ |
| கி | பே | ப் | ஆ | க | யோ | க | பு | பி | யி |
| க் | து | ர் | கு | தை | ட | ன | தா | சா | யோ |
| ழு | வ | கு | நி | வு | த் | ஞா | ன | த் | தை |
| ம் | வை | வே | ள் | லை | மா | ழு | ம் | ந் | த் |
| கோ | ர | ன | ப் | ர | வா | யா | ச | னி | ய |
| க் | ட் | யி | ல | ள | வ | ழ் | ந் | த | வி |
| யா | ரி | மோ | ஆ | கா | க | வ | வு | ய் | ஓ |

1. யாதொன்றின் சிலையையோ __________ நீ உருவாக்க வேண்டாம்.
2. என் விதிமுறைகளை கடைப்பிடிப்போருக்கு ________ தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன்.
3. ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான __________ நாள்.
4. ஆண்டவரே, __________ அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன.
5. தம் மகனையே அளிக்கும் அளவுக்குக் __________ உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.
6. கிரேக்கர் __________ நாடுகிறார்கள்.
7. என் தந்தையின் இல்லத்தைச் __________ ஆக்காதீர்கள்.
8. ஏனெனில் மனித __________ இருப்பதை அவர் அறிந்திருந்தார்.
9. உம் இல்லத்தின் மீதுள்ள __________ என்னை எரித்து விடும்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | விடுதலைப்பயணம் 20 : 1 – 17 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 19: 7, 8, 9, 10 |
| பதிலுரை: ஆண்டவரே, நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன. | |
| இரண்டாம் வாசகம்: | 1 கொரிந்தியர் 1 : 22 – 25 |
| நற்செய்தி வாழ்த்தொலி: தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். | |
| நற்செய்தி வாசகம்: | யோவான் 2 : 13 – 25 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 6:30 மணி<br>தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.